දුරකථන ) 0112669192 ,0112675011
தொலைபேசி ) 0112694033,0112675280
Telephone ) 0112675449

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපැල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXC/02/2025

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

දිනය )
திகதி )2024/12/.24
Date )

සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
**Ministry of Health & Mass Media**

பொதுச் சுற்றுநிருப இலக்கம் :- 02 - 01 /2025

மாகாண சுகாதார செயலாளர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
பணிப்பாளர்- தேசிய வைத்தியசாலை - கண்டி
பணிப்பாளர்- தேசிய வைத்தியசாலை - காலி
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
உரிய நிறுவனத் தலைவர்கள்

**பொதுசன சுகாதார இாசாயனகூட தொழிநுட்பவியல் உத்தியோகத்தர் II ஆம் 'அ' பிரிவின்/ தரம் II திணைக்களப்பரீட்சையும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் – 2025 (முதலாவது தடவை)**

பொதுசன சுகாதார **இாசாயனகூட தொழிநுட்பவியல் உத்தியோகத்தர் சேவையின் II ஆம் 'அ'** பிரிவின்/ தரம் **II** உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள சம்பளத் திட்டத்தின் நான்காம் சம்பளப் படிமுறையை எய்துவகற்கு முன்பு தேர்சசி அடைய வேண்டிய வினைக்திறமை காண் திகதிகளில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் 2025/03/01 ஆம் 02 திகதி நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. திணைக்களப் பரீட்சையானது விடயம் தொடர்பான எழுத்து மூலமான வினாத்தாளினை கொண்டுள்ளதோடு இப்பரீட்சையானது ஆங்கில மொழியில் மாத்திரம் நடைபெறும். பரீட்சை நடாத்தப்படும். இடம், நேரம் , என்பன பிரவேசப் பத்திரத்தில் குறிப்படப்படும்.

02. **தகைமைகள்**

2025/01/17 ஆம் திகதியுடன் பொது சுகாதார இரசாயனகூட தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவியில் வகுதி II 'அ' / தரம் II ற்கு நியமனம் பெற்று இதுவரையிலும் பரீட்சையினை பூரணப்படுத்தாத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும்:** 2025/01/17 ஆம் திகதியுடன் வகுதி II 'அ' / தரம் II ற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பிவைக்க ஆவண செய்யவும்.

03. **விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு சுவசிரிபாய , இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு 2025/01/17 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் **"பொதுசன சுகாதார இாசாயனகூட தொழிநுட்பவியல் உத்தியோகத்தர் II ஆம் அ பிரிவின்/ தரம் II திணைக்களப்பரீட்சையும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் 2025 (முதலாவது தடவை)** எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைதைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியேகைத்தரும் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9 ශ 4 ) கடித உறைகள் 01 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ

குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகத்திக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**கவனிக்கவும்:** மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - 09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## 04. பரீட்சைக் கட்டணம்

i. பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் விடயம் ஒன்றிற்கு ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

ii. இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக்காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றவோ, மீள வழங்கப்படவோ மாட்டாது.

## 05. பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்

i. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

ii. ஆண், பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதாரம் அமைச்சினதும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை திணைக்கள அடையாள அட்டை
(இ) வலுவுடைய சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுடைய கடவுச் சீட்டு

## 06. பரீட்சைத்திட்டம்:

இப் பரீட்சை திணைக்களப் பரீட்சை மற்றும் வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சை எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. திணைக்களப் பரீட்சை **விடய அறிவு எழுத்துமூலமானது, விடய அறிவு பேச்சு மொழிமூலமானது,** மற்றும் **செயல்முறைப் பயிற்சி** எனும் 03 பிரிவுகளைக் கொண்டதுடன் அதில் ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்படும். ஒவ்வொரு பகுதியிற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையானது **தாபன விதிக்கோவை மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு** முறை விதிகள் மற்றும் **நிதிப்பிரமாணம்** எனும் இரு விடயங்களுக்கும் தோற்றுவதனுடன் அவ்விரு விடயங்களிற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு பகுதியிற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக்கொள்ள முடியும். **முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.**

## 07 பரீட்சைப் பாடத்திட்டம்

### 7.1 வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சை

#### 7.1.1 தாபன விதிக்கோவை

இப்பரீட்சைக்கான நேரம் 02 மணித்தியாலங்களாகும். கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக் கொண்டுள்ளதுடன் விரும்பிய ஏதேனும் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**தாபன விதிக்கோவையின் கீழ்வரும் அத்தியாயங்களின்படி**

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XV | கல்வி, பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளி நாட்டிற்குச் செல்லுதல் |
| அத்தியாயம் | XVI | விடுமுறைப் பயணம் (Holiday Travel ) |
| அத்தியாயம் | XXIII | விசேட வகையான நோய்கள் காரணமாக அல்லல்படும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் நிபந்தனைகள். |
| அத்தியாயம் | XXIV | சம்பளக் கடன் / முற்பணங்கள் |
| அத்தியாயம் | XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | XXVII | கடிதத் தொடர்பாடல் முறைகள் |
| அத்தியாயம் | XXVIII | நிர்வாக நடைமுறைகள் |
| அத்தியாயம் | XXX | அரசாங்க ஊழியர்கள் தொடர்பான அரசாங்கத்தின் உரிமைகள் |
| அத்தியாயம் | XXXIII | சட்ட ஆலோசனைகளும், சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் | XLVII | பொது நடத்தையும், ஒழுக்கமும் |
| அத்தியாயம் | XLVIII | ஒழுக்காற்று நடைமுறை |

**7.2.2 நிதிப் பிரமாணங்கள்**

இந்த வினாத்தாளுக்கு 02 மணித்தியாலங்கள். கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**நிதிப்பிரமாணத்தின் கீழ்வரும் அத்தியாயங்களின்படி**

அத்தியாயம் VI - பொது நிதியினைப் பராமரித்தல் / பாதுகாத்தல் (Custody) முதலியன, காசு கட்டு நிதி மற்றும் வங்கிக்கணக்குகள் / பொதுநிதியின் பிணை / முறி, பகுப்பாய்வுச் சபை (Board of Survey) வங்கிப்பற்று, வங்கிக் கணக்குகள் (நிதிப்பிரமாணங்கள் 315 - 396)

அத்தியாயம் XIII - விநியோக வேலைகள், மற்றும் சேவைகள் (நிதிப்பிரமாணங்கள் 708 - 775)

**7.2 திணைக்களப் பரீட்சை**

**7.2.1 விடயம் தொடர்பானது எழுத்துமூலம்**

இப்பரீட்சைக்கான நேரம் 03 மணித்தியாலங்களாகும். கட்டுரை வடிவிலான 08 வினாக்களைக் கொண்டுள்ளதுடன் விரும்பிய ஏதேனும் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

**பாடத்திட்டம்**

i. மலேரியா, யானைக்கால், பாலியல்சார் நோய்கள், எயிட்ஸ், தொழுநோய் ஆகிய துறைசார் விடங்கள்

ii. இரசாயனகூட முகாமைத்துவம்

**7.2.2 விடயம் தொடர்பானது பிரயோக மூலம் -** துறைசார் விடயப்பரப்புக்கு ஏற்புடைய இயலுமைகள், செயற்பாடுகள் என்பவற்றைத் தழுவிய பிரயோகப் பரீட்சையாகும். விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சைக்கு ஏற்புடைய பாடத்திட்டமும் இதற்கு ஏற்புடையதாகும். 100 புள்ளிகள். நேரம் பரிட்சையைப் பொறுத்து தீர்மாணிக்கப்படும்.

**7.2.3 விடயம் தொடர்பானது வாய்மொழி மூலம் -** விடயம் தொடர்பான எழுத்துப் பரீட்சைக்கு ஏற்புடைய பாடத்திட்டம் மற்றும் சேவையில் ஈடுபடும் போது எழக்கூடிய பிரச்சினைகள் பற்றிய வாய்மொழி பரிசோதனையாகும். 100 புள்ளிகள்.நேரம்15 வினாடிகள்.

**08.** **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**09.** தயவு செய்து இச்சுற்று நிருபத்தினை உங்களது பிரிவில்/ விஷேட இயக்கத்தில்/ நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த தகவல்களை www.health.gov.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

(www.health.gov.lk ⟶ Staff Access ⟶ Admin ⟶ Exam ⟶ Circular)

**குறிப்பு : இவ்வறிவித்தல் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.**

யு எ எஸ் எச் சிசிர குமார
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) II
செயலாளருக்காக

U.A.S. Harshapriya Sisira Kumara
Deputy Director General (Administration) 02
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10

| EXC |
|---|

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலகப் பாவனையின் பொருட்டு |
|---|
| |

**<u>பொதுசன சுகாதார இரசாயனகூட தொழிநுட்பவியல் உத்தியோகத்தர் II ஆம் 'அ' பரிவின்/ தரம் II திணைக்களப்பரீட்சையும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் – 2025 (முதலாவது தடவை)</u>**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும் -.......................................................................

..........................................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்) -

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் ( தமிழில்) - ..........................................................................

..........................................................................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) -

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி - ......................................................................................................

(ii). வகுப்பு II "அ" / தரம் II ற்கு பதவியுயர்த்தப்பட்ட திகதி - ...........................................

கடித இலக்கம் - ...........................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் - ......................................................................

(iv) தேசிய அடையாள அட்டை இல -

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(v) கையடக்கத் தொலைபேசி இலக்கம் -

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(vi) மின்னஞ்சல் முகவரி : ........................................................................................

02. **தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√ ) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.**

| | | | |
|---|---|---|---|
| தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக் நடைமுறைகள் வினாப்பத்திரம் | ☐ | விடயம் தொடர்பான செயல்முறை | ☐ |
| நிதிப்பிரமாணம் | ☐ | விடயம் தொடர்பான வாய்மொழி | ☐ |
| விடயம் தொடர்பான எழுத்து | ☐ | | |

03. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் - (தமிழில்) ...................................................................

(ஆங்கிலத்தில்)...................................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் - .......................................................................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் ☐ மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் - ..............................................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணபதாரியினது முகவரியிடப்பட்ட 9"x4" அளவு ரூபா.110.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 01 இணைக்கப்பட்டு உள்ளதா? ................................................................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) - ..............................................................................................

..........................................................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) - ..................................................

..........................................................................................................................................

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - ............................................

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா?

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? …………….

முத்திரைக் கூண்டு

**06. விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா ……………………. பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………                ……………………………………………….

விண்ணப்பதாரரின்

கையொப்பம்

**07 சுயவிபரக் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் II ற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : …………………………                ………………………………………

பெயர் மற்றும் கையொப்பம்

**07. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருமதி/செல்வி* ……………………………………………………. என்பவர்………………

உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும் அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா …………….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் , எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………                ……………………………………..

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

**08. பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ……………………………………………. என்பவர் ……………..

உத்தியோகத்தராக நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வின்ணபதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணபதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ……………………………                ……………………………………….

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட

பிரிவு

தலைவரின் கையொப்பம்

இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

(தேவையற்றனவற்றை கீறிடவும்)